[1980 பிப்ரவரி 11

திரு. துரை முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் இரண்டு ஊர்களுக்கு மட்டும் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு இயங்கி வருவதாகச் சொன்னார்கள். மற்ற ஊர்களுக்கு எப்போது தண்ணீர் கொடுக்கப்படும்? எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்துகொடுக்கப்படும் என்று அறிவித்தார்களே, இப்போது இந்த மூன்று கிராமங்களுக்கும் குடிநீர் வழங்குவதைப் பற்றிய நிலை என்ன? ஓராண்டுக்கு முன்னதாக சங்கராபுரம் பேரூராட்சிக்கு $8\frac{1}{4}$ இலட்ச ரூபாயில் குடிநீர்த் திட்டம் ஒன்றுக்கான கால்நடு விழா எல்லாம் செய்தார்கள். அது எப்போது முடியும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர்களே சங்கராபுரத்தைப் பொறுத்தவரையில் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன். அடுத்து நீங்கள் குறிப்பிட்ட மூன்று ஊர்களில் மூங்கில் துறைப்பட்டு என்ற இடத்தில் ஆண்டில் 6 மாதகாலம்தான் தண்ணீர் கிடைக்கின்றது என்று தகவல் அரசுக்குக் கிடைத்திருப்பதால் அந்த ஊருக்கு குடிநீர் வழங்குவதைப்பொறுத்தவரையில் அது 6 ஆவது பிரிவில் இருந்து வந்தது. அதை 3 ஆவது பிரிவுக்கு மாற்றி வேலை எடுத்துக்கொள்ளலாம் என்ற பரிந்துரை பரிசீலனையில் உள்ளது.

நாட்டரம்பள்ளி பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கல்.

* வினா எண் 112— திரு தி. அன்பழகன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வடாற்காடு மாவட்டம் நாட்டரம்பள்ளி பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: இல்லை.

திரு தி. அன்பழகன்: தலைவரவர்களே நாட்டரம்பள்ளி பேரூராட்சியைச் சேர்ந்த மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இது இருப்பதாலும் மேலும் திருப்பத்தூருக்கு பாலாற்றிலிருந்து தண்ணீர் கொண்டு செல்லப்படுவதாலும் அதன் அருகாமையிலேயே இந்தப் பேரூராட்சி இருப்பதாலும் அந்தக் குடிதண்ணீரைப் பயன் படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1980 பிப்ரவரி 11]

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே நாட்டரம்பள்ளி பேரூராட்சி ஆய்வுத் தொகையைக் கட்டுவதற்கு நிதிவசதி இல்லை என்று கூறிவிட்டது. எனினும், பேரூராட்சியின் சார்பில் வாரியம் ஆய்வுப் பணிகளை ஏற்று நடத்தவும் இப்பணிகளுக்கு ஆகும் செலவுத் தொகையை திட்ட மதிப்பீட்டில் இணைத்து பின்பு அரசு ஒப்புதலுடன் இத்திட்டம் நிறைவேறும் பொழுது திருப்பிச் செலுத்தவும் பேரூராட்சி தீர்மானம் நிறைவேற்றி அனுப்பிவைத்தால் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும். பொதுவாக ஆய்வுப் பணம் முன்னதாகத் தரவேண்டும். திட்டத்திற்கான பணத்தைப் பின்னதாகத் தர வேண்டும். எனவே ஆய்வுத் தொகையையும் திட்டத் தொகையையும் பின்னதாகத் தருகிறோம் என்று தீர்மானம் நிறைவேற்றி பேரூராட்சி அரசுக்கு அனுப்பி வைத்தால் அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தி. அன்பழகன் : தலைவரவர்களே நாட்டரம்பள்ளிப் பேரூராட்சிக்கு நிதிவசதி குறைவாக இருப்பதால் அரசு இதற்காக சலுகை அளித்து இந்தத் திட்டத்தை செயலபடுத்த ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் :— தலைவரவர்களே அதற்காகத்தான் சொன்னேன். ஆய்வுத் தொகையை முன்னதாகக் கட்டாமல் ஆய்வுத் தொகையையும் திட்டத் தொகையையும் சேர்த்துப் பின்னதாகக் கட்டுகிறோம் என்று தீர்மானம் நிறைவேற்றினால் அந்தத் திட்டம் குறித்து ஆய்வு செய்வதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே அப்படித் தீர்மானம் நிறைவேற்றி அனுப்புவதறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சி செய்தால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீர்ப்பாசனத் திட்டங்கள் பற்றிய ஆய்வு.

* வினா எண் 113—திரு எஸ். கணேசன் : மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நீர்ப்பாசனத் திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க மாநில மட்டத்தில் உயர்மட்ட அமைப்புக்களை ஏற்படுத்த வேண்டும் என்று மாநில அரசை மத்திய அரசு வற்புறுத்தியுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) இதுபற்றிய விவர அறிக்கை சட்டமன்றப் பேரவையின்முன் வைக்கப்பெற்றது.

[356-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது]